(பத்தாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

**இல. 111.]**

# பாராளுமன்றக் கூட்ட அறிக்கை

2025 நவம்பர் 26, புதன்கிழமை மு.ப. 9.00 மணிக்கு

## சமூகமளித்தோர்:

**கௌரவ (டாக்டர்) ஜகத் விக்கிரமரத்ன,** சபாநாயகர்

**கௌரவ (டாக்டர்) ரிஸ்வி சாலி**, பிரதிச் சபாநாயகரும் குழுக்களின் தவிசாளரும்

**கௌரவ (திருமதி) ஹேமாலி வீரசேகர**, குழுக்களின் பிரதித் தவிசாளர்

---

**கௌரவ கலாநிதி ஹரினி அமரசூரிய,** பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்

**கௌரவ (பேராசிரியர்) கிரிஷாந்த அபேசேன,** விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அமைச்சர்

**கௌரவ கே.டீ. லால் காந்த,** கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர்

**கௌரவ சுனில் குமார கமகே,** இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர்

**கௌரவ ராமலிங்கம் சந்திரசேகர்,** கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர்

**கௌரவ குமார ஜயகொடி,** வலுசக்தி அமைச்சர்

**கௌரவ (டாக்டர்) நலிந்த ஜயதிஸ்ஸ,** சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் மற்றும் அரசாங்கக் கட்சி முதற்கோலாசான்

**கௌரவ சட்டத்தரணி ஹர்ஷன நாநாயக்கார,** நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர்

**கௌரவ (கலாநிதி) உபாலி பன்னிலகே,** கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டுகை அமைச்சர்

**கௌரவ (டாக்டர்) சுசில் ரணசிங்ஹ,** வீடமைப்பு, நிர்மாணிப்பு மற்றும் நீர் வழங்கல் அமைச்சர்

**கௌரவ பிமல் ரத்நாயக்க,** போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர் மற்றும் பாராளுமன்றச் சபை முதல்வர்

**கௌரவ ஆனந்த விஜேபால,** பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சர்

**கௌரவ கே.வி. சமந்த வித்யாரத்ன,** பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சர்

**கௌரவ (கலாநிதி) ஹினிதும சுனில் செனெவி,** புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர்

**கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,** கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சர்

கௌரவ **விஜித ஹேரத்,** வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சர்

கௌரவ **சஜித் பிரேமதாச,** பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர்

கௌரவ **(கலாநிதி) (செல்வி) கௌஷல்யா ஆரியரத்ன,** வெகுசன ஊடக பிரதி அமைச்சர்

கௌரவ **நாமல் கருணாரத்ன,** கமத்தொழில் மற்றும் கால்நடை வளங்கள் பிரதி அமைச்சர்

கௌரவ **ஜனித ருவன் கொடித்துவக்கு,** துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் பிரதி அமைச்சர்

கௌரவ **ரத்ன கமகே,** கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் பிரதி அமைச்சர்

கௌரவ **நிசாந்த ஜயவீர,** பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர்

கௌரவ **மேஜர் ஜெனரல் (ஓய்வுபெற்ற) அருண ஜயசேகர,** பாதுகாப்பு பிரதி அமைச்சர்

கௌரவ **சுகத் திலகரத்ன,** விளையாட்டுத்துறை பிரதி அமைச்சர்

கௌரவ **வசந்த பியதிஸ்ஸ,** கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டுகை பிரதி அமைச்சர்

கௌரவ **சுந்தரலிங்கம் பிரதீப்,** பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் பிரதி அமைச்சர்

கௌரவ **முனீர் முலாபர்,** சமய மற்றும் கலாசார அலுவல்கள் பிரதி அமைச்சர்

கௌரவ **(பேராசிரியர்) ருவன் ரணசிங்க,** சுற்றுலா பிரதி அமைச்சர்

கௌரவ **சட்டத்தரணி சுனில் வடகல,** பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் பிரதி அமைச்சர்

கௌரவ **எரங்க வீரரத்ன,** டிஜிட்டல் பொருளாதார பிரதி அமைச்சர்

கௌரவ **உபாலி சமரசிங்ஹ,** கூட்டுறவு அபிவிருத்தி பிரதி அமைச்சர்

கௌரவ **ரீ. பீ. சரத்,** வீடமைப்பு, நிர்மாணிப்பு மற்றும் நீர் வழங்கல் பிரதி அமைச்சர்

கௌரவ **அரவிந்த செனரத்,** காணி மற்றும் நீர்ப்பாசன பிரதி அமைச்சர்

கௌரவ **(டாக்டர்) மதுர செனெவிரத்ன,** கல்வி, உயர் கல்வி பிரதி அமைச்சர்

கௌரவ **தினிந்து சமன் ஹென்னாயக்க,** இளைஞர் விவகாரங்கள் பிரதி அமைச்சர்

---

**கௌரவ அஜித் அகலகட**

**கௌரவ அமிர்தநாதன் அடைக்கலநாதன்**

**கௌரவ அபூபக்கர் ஆதம்பாவா**

**கௌரவ ஹெக்டர் அப்புஹாமி**

**கௌரவ ரோஹித அபேகுணவர்தன**

**கௌரவ (டாக்டர்) நிஹால் அபேசிங்ஹ**

**கௌரவ (டாக்டர்) இராமநாதன் அர்ச்சுனா**

**கௌரவ ஜே.சீ. அலவத்துவல**

**கௌரவ எம்.கே. எம். அஸ்லம்**

**கௌரவ ஹேஷா விதானகே அங்கும்புர ஆரச்சி**

**கௌரவ லக்ஸ்மன் நிபுண ஆரச்சி**

கௌரவ பீ. ஆரியவங்ஷ

கௌரவ (டாக்டர்) நஜீத் இந்திக்க

கௌரவ கே.இளங்குமரன்

கௌரவ எம்.எஸ். உதுமாலெப்பை

கௌரவ (திருமதி) ஒஷானி உமங்கா

கௌரவ கயந்த கருணாதிலக்க

கௌரவ ரவி கருணாநாயக்க

கௌரவ சனாதிபதி சட்டத்தரணி எம். நிசாம் காரியப்பர்

கௌரவ (திருமதி) சட்டத்தரணி சமிந்திரானி கிரிஎல்லே

கௌரவ கதிரவேலு சண்முகம் குகதாசன்

கௌரவ வசந்த புஷ்ப குமார

கௌரவ சமிந்த லலித் குமார

கௌரவ சட்டத்தரணி சரத் குமார

கௌரவ (திருமதி) சட்டத்தரணி நிலந்தி கொட்டஹச்சி

கௌரவ லசித் பாஷண கமகே

கௌரவ சதுர கலப்பத்தி

கௌரவ அஜித் கிஹான்

கௌரவ (டாக்டர்) ஜகத் குணவர்தன

கௌரவ (திருமதி) சமன்மலீ குணசிங்ஹ

கௌரவ டி.வீ. சானக

கௌரவ கயான் ஜனக

கௌரவ நலீன் பண்டார ஜயமஹ

கௌரவ சட்டத்தரணி அநுராத ஜயரத்ன

கௌரவ (டாக்டர்) கவிந்த ஹேஷான் ஜயவர்தன

கௌரவ திலித் ஜயவீர

கௌரவ சட்டத்தரணி தயாசிறி ஜயசேக்கர

கௌரவ மயில்வாகனம் ஜெகதீஸ்வரன்

கௌரவ றஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி

கௌரவ எம். ஏ. எம். தாஹிர்

கௌரவ (டாக்டர்) செல்லத்தம்பி திலகநாதன்

கௌரவ சாமர சம்பத் தசனாயக

கௌரவ சுகத் வசந்த த சில்வா

கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா

கௌரவ தனுர திசாநாயக

கௌரவ தர்மப்பிரிய திசாநாயக்க

கௌரவ சட்டத்தரணி சுசந்த தொடாவத்த

கௌரவ கிங்ஸ் நெல்சன்

கௌரவ அருண பனாகொட

கௌரவ நிமல் பலிஹேன

கௌரவ அஜித் பி. பெரேரா

கௌரவ கே. சுஜித் சஞ்ஜய பெரேரா

கௌரவ ஜீ.ஜீ. பொன்னம்பலம்

கௌரவ சட்டத்தரணி சித்ரால் பெர்னாந்து

கௌரவ ஸ்டெபனி பிரனாந்து

கௌரவ கந்தசாமி பிரபு

கௌரவ அமில பிரசாத்

கௌரவ லால் பிரேமநாத்

கௌரவ நந்த பண்டார

கௌரவ பத்மசிரி பண்டார

கௌரவ ஆர். எம். ரஞ்சித் மத்தும பண்டார

கௌரவ ரவீந்திர பண்டார

கௌரவ றிஸாட் பதியுதீன்

கௌரவ விஜேசிரி பஸ்நாயக்க

கௌரவ லெப்டினன் கமாண்டர் (ஓய்வுபெற்ற) பிரகீத் மதுரங்க

கௌரவ ஜகத் மனுவர்ண

கௌரவ எஸ்.எம். மரிக்கார்

கௌரவ கே.காதர் மஸ்தான்

கௌரவ இம்ரான் மகரூப்

கௌரவ சானக மாதுகொட

கௌரவ ருவன் மாபலகம

கௌரவ (கலாநிதி) நந்தன மில்லகல

கௌரவ சனாதிபதி சட்டத்தரணி பைஸர் முஸ்தபா

கௌரவ இஸ்மாயில் முத்து மொஹம்மட்

கௌரவ தனுஷ்க ரங்கனாத்

கௌரவ ஆர்.எம். சமந்த ரனசிங்ஹ

கௌரவ சுனில் ரத்னசிரி

கௌரவ ஆர்.எம். காமிணி ரத்நாயக்க

கௌரவ துரைராசா ரவிகரன்

கௌரவ முஜிபுர் ரஹுமான்

கௌரவ சட்டத்தரணி நாமல் ராஜபக்ஷ

கௌரவ மனோஜ் ராஜபக்ஷ்

கௌரவ சுனில் றாஜபக்ஷ

**கௌரவ (கலாநிதி) வீ.எஸ். இராதாகிருஷ்ணன்**

**கௌரவ சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணிக்கம்**

**கௌரவ வருண லியனகே**

**கௌரவ (திருமதி) சட்டத்தரணி ஹசாரா லியனகே**

**கௌரவ (திருமதி) தீப்தி வாசலகே**

**கௌரவ எம்.எஸ் அப்துல் வாசித்**

**கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன**

**கௌரவ ஆர்.ஜீ. விஜேரத்ன**

**கௌரவ தர்மப்ரிய விஜேசிங்ஹ**

**கௌரவ சமிந்த விஜேசிறி**

**கௌரவ அசித நிரோஷண எகொட வித்தான**

**கௌரவ திலிப் வெதஆரச்சி**

**கௌரவ ஞானமுத்து ஸ்ரீநேசன்**

**கௌரவ (டாக்டர்) பத்மநாதன் சத்தியலிங்கம்**

**கௌரவ திலிண சமரகோன்**

**கௌரவ (டாக்டர்) நிஷாந்த சமரவீர**

**கௌரவ (செல்வி) அம்பிகா சாமிவெல்**

**கௌரவ சந்தன சூரியஆரச்சி**

**கௌரவ மேஜர் ஜெனரல் (ஓய்வுபெற்ற) ஜீ.டி.சூரியபண்டார**

**கௌரவ சட்டத்தரணி அர்ஜுன சுஜீவ சேனசிங்ஹ**

**கௌரவ (டாக்டர்) ஜனக சேனாரத்ன**

**கௌரவ (கலாநிதி) எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ்**

**கௌரவ சந்திம ஹெட்டிஆரச்சி**

**கௌரவ சம்பிக ஹெட்டிஆரச்சி**

**கௌரவ (செல்வி) சட்டத்தரணி லக்மாலி ஹேமசந்திர**

**கௌரவ தினேஷ் ஹேமந்த**

**கௌரவ முஹம்மட் பைசல்**

திருமதி குஷானி ரோஹனதீர, பாராளுமன்றச் செயலாளர் நாயகம்

திரு. சமிந்த குலரத்ன, பதவியணிப் பிரதானி மற்றும் பாராளுமன்றப் பிரதிச் செயலாளர் நாயகம்

திரு. ஹன்ஸ அபேரத்ன, உதவிச் செயலாளர் நாயகம்

**ஒத்திவைப்பின் பிரகாரம் பாராளுமன்றம் கூடியது. சபாநாயகர் தலைமை தாங்கினார்.**

**1. *சபாநாயகரின் அறிவித்தல்கள்:*** சபாநாயகர் பின்வருமாறு அறிவித்தல் விடுத்தார்:—
"கௌரவ உறுப்பினர்களே!

தனி உறுப்பினர் பிரேரணைகளை விவாதத்திற்கு எடுப்பதற்காக சந்தர்ப்பத்தை வழங்கும் போது, குறித்த பிரேரணைகளை சமர்ப்பித்துள்ள சகல பாராளுமன்ற உறுப்பினருக்கு சமமான சந்தர்ப்பம் கிடைப்பதை உறுதிப்படுத்துவதற்காக தற்போது வாய்மூல விடைக்கான வினாக்களை ஒழுங்குப் பத்திரத்திற்கு உள்ளடக்கும் போது அடிப்படையாகக் கொள்ளப்படும் வழிமுறையினையே தனி உறுப்பினர் பிரேரணைகளை விவாதத்திற்கு எடுக்கும் சந்தர்ப்பத்திலும் பிரயோகிக்குமாறு உறுப்பினர்கள் விடுத்த கோரிக்கைகளுக்கிணங்க, பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுவின் அனுமதியுடன் தயார் செய்யப்பட்ட புதிய வழிமுறை, 2025.11.18 ஆம் திகதியன்று நடைபெற்ற பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்தில் விரிவாக பரிசீலிக்கப்பட்டதன் பின்னர், குறித்த புதிய வழிமுறையை 2026 ஆம் ஆண்டு சனவரி மாதம் தொடக்கம் நடைமுறைப்படுத்துவதற்கு குழு தீர்மானித்துள்ளது என்பதை இவ்வுயரிய சபைக்கு அறியத்தர விரும்புகிறேன்.

அதன் அடிப்படையில் அடுத்த தனி உறுப்பினர் பிரேரணைகள் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ள 2026 ஆம் ஆண்டு சனவரி மாதம் தொடக்கம் இப்புதிய வழிமுறைக்கமைவாக தனி உறுப்பினர் பிரேரணைகளை விவாதத்திற்கு எடுத்துக் கொள்வதற்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும் என்பதுடன், உத்தேச புதிய வழிமுறையின் பிரகாரம் முதலாவது தினத்திற்காக பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுவால் தீர்மானிக்கப்படும் பிரேரணை எண்ணிக்கைகள், அந்த சந்தர்ப்பத்தில் ஒழுங்குப் புத்தகத்தில் / ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தத்தில் கால வரிசைப்படி, உறுப்பினர்கள் பிரேரணைகளை சமர்ப்பித்த ஒழுங்கின் அடிப்படையில் தெரிவு செய்யப்படுவதுடன், அடுத்த மாத தனி உறுப்பினர் பிரேரணைகள் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும் திகதிக்காக பிரேரணைகளைத் தெரிவு செய்யும்போது, கால வரிசையில் அடுத்த பிரேரணையை சமர்ப்பித்துள்ள உறுப்பினருக்கு சந்தர்ப்பம் கிடைக்கும் வகையில் விவாதத்திற்குத் தெரிவு செய்யப்படும். அதன்போது உறுப்பினர்கள் தமது பெயரில் பிரசுரிக்கப்பட்டுள்ள பிரேரணைகளிடையே முதலில் விவாதத்திற்கு எடுப்பதற்கு உத்தேசிக்கும் அல்லது முன்னுரிமை வழங்கப்பட வேண்டிய பிரேரணையைக் குறிப்பிடுவாராயின் அது தொடர்பில் பரிசீலிக்கப்படுமென்பதையும் மேலும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அதற்கமைவாக, தனி உறுப்பினர் பிரேரணைகளை சமர்ப்பிக்கும் சகல பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் சம சந்தர்ப்பம் வழங்கும் நோக்கில் நடைமுறைப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ள மேற்படி புதிய வழிமுறையை வெற்றிகரமாக்கிக் கொள்வதற்காக சகல உறுப்பினர்களிடமிருந்தும் கிடைக்கப் பெறும் ஒத்துழைப்பை பெரிதும் பாராட்டுகிறேன்."

**2. பத்திரங்கள் சமர்ப்பித்தல்:** (1) பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர் —

(i) 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 மற்றும் 5 ஆம் பிரிவுகளின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2025 ஒற்றோபர் 09 ஆம் திகதிய 2457/05 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கட்டளை; மற்றும்

(ii) (235 ஆம் அத்தியாயமான) சுங்கக் கட்டளைச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் கீழ் இறக்குமதித் தீர்வைகள் தொடர்பான தீர்மானம்
(2025 ஒற்றோபர் 09 ஆம் திகதிய 2457/06 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை)

ஆகியவற்றைச் சமர்ப்பித்து, அக்கட்டளை மற்றும் தீர்மானம் அரசாங்க நிதி பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**3. பொது மனுக்கள் சமர்ப்பித்தல்:**

பண்டாரவளை, வெவதென்ன, வைத்தியசாலை வீதி, இல. 48/19 இல் வதியும் திரு. கே.எம். மானவசிங்க பண்டாரவினது 2025.06.09 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ கே.வி. சமந்த வித்யாரத்ன சமர்ப்பித்தார்.

மேற்படி மனு பாராளுமன்ற நிலையியற் கட்டளை 30(10) இன் கீழ் பொது மனுக்கள் பற்றிய குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டது.

**4. நுண்நிதி மற்றும் கடன் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபை:** பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர் பின்வருமாறு பிரேரித்தார்,— இலங்கை நுண்நிதி மற்றும் கடன் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபையின் தாபிப்புக்கென ஏற்பாடு செய்வதற்கும்; பணக் கடன் வழங்கு தொழிலையும் நுண்நிதித்தொழிலையும் ஒழுங்குபடுத்துவதற்கும்; பணக் கடன் வழங்கு தொழிலினதும் நுண்நிதித்தொழிலினதும் வாடிக்கையாளர்களுக்கு பாதுகாப்பை வழங்குவதற்கும்; 2016 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, நுண்நிதியளிப்புச் சட்டத்தை நீக்குவதற்கும் அத்துடன் அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டமூலம்.

இச் சட்டமூலம் 2025 டிசம்பர் 10 ஆம் திகதி புதன்கிழமை இரண்டாம் மதிப்பீடு செய்யப்படும் என்றும் இச்சட்டமூலம் அச்சிடப்பட வேண்டுமெனவும் அரசாங்க நிதி பற்றிய குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனவும் கட்டளையாயிற்று.

**5. ஒதுக்கீட்டுச் சட்டமூலம் — (ஒதுக்கப்பட்ட பதினாறாவது நாள்):** குழுநிலையில் மேலும் பரிசீலிக்கப்பட்டது.

(குழுநிலையில்)

சபாநாயகர் தலைமை தாங்கினார்.

தலைப்பு 151

நிகழ்ச்சித்திட்டம் 01 (மீண்டுவரும் செலவினம்)

"நிகழ்ச்சித்திட்டம் 10/- ரூபாவினால் குறைக்கப்படுமாக" என கௌரவ திலிப் வெதஆரச்சி பிரேரித்தார்.

(மு.ப. 10.36 மணிக்கு பிரதிச் சபாநாயகர் தலைமை தாங்கினார்.)

(பி.ப. 1.00 மணிக்கு குழுக்களின் பிரதித் தவிசாளர் தலைமை தாங்கினார்.)

(பி.ப. 2.19 மணிக்கு கௌரவ இம்ரான் மகரூப் தலைமை தாங்கினார்.)

(பி.ப. 3.06 மணிக்கு கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன தலைமை தாங்கினார்.)

(பி.ப. 4.00 மணிக்கு கௌரவ லக்ஸ்மன் நிபுண ஆரச்சி தலைமை தாங்கினார்.)

(பி.ப. 5.04 மணிக்கு கௌரவ எம்.கே. எம். அஸ்லம் தலைமை தாங்கினார்.)

பிரேரணை குழுவுக்கு விடப்பட்டு நிராகரிக்கப்பட்டது.

**கடற்றொழில், நீரியல் வளங்கள் மற்றும் கடல் வளங்கள் அமைச்சு**

நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் சார்பாக, கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் பிரேரித்த திருத்தம்: 34 ஆம்

பக்கத்தில் 12 ஆவது வரியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றைப் பதிலீடு செய்தல் வேண்டும்:—

"மூலதனம் 7,700,000,000 "

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

"வாசகம் திருத்தப்பட்டவாறு அட்டவணையின் ஒருபகுதியாக இருக்க வேண்டும்" எனும் பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

151 ஆம் தலைப்பின் 01 ஆம் நிகழ்ச்சித் திட்டம் — மீண்டுவருஞ் செலவுக்கென ரூபா 460,800,000 அட்டவணையில் சேர்க்கப்பட வேண்டுமென்ற பிரேரணை குழுவுக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

நிகழ்ச்சித்திட்டம் 01 (மூலதனச் செலவினம்)

151 ஆம் தலைப்பின் 01 ஆம் நிகழ்ச்சித் திட்டம் — மூலதனச் செலவுக்கென ரூபா 104,800,000 அட்டவணையில் சேர்க்கப்பட வேண்டுமென்ற பிரேரணை குழுவுக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் சார்பாக, கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் பிரேரித்த திருத்தம்: 34 ஆம் பக்கத்தில் 16 ஆவது வரியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றைப் பதிலீடு செய்தல் வேண்டும்:—

"நிகழ்ச்சித்திட்டம் 02 அபிவிருத்திச் செயற்பாடுகள் 2,381,500,000 7,209,800,000 "

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டது.

"வாசகம் திருத்தப்பட்டவாறு அட்டவணையின் ஒருபகுதியாக இருக்க வேண்டும்" எனும் பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

தலைப்பு 290

நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் சார்பாக, கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் பிரேரித்த திருத்தம்: 35 ஆம் பக்கத்தில் 2 ஆவது வரியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றைப் பதிலீடு செய்தல் வேண்டும்:—

"நிகழ்ச்சித்திட்டம் 01 செயல்முறைச் செயற்பாடுகள் 1,257,700,000 385,400,000 "

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டது.

"வாசகம் திருத்தப்பட்டவாறு அட்டவணையின் ஒருபகுதியாக இருக்க வேண்டும்" எனும் பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அமைச்சு**

நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் சார்பாக, விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அமைச்சர் பிரேரித்த திருத்தம்: 39 ஆம் பக்கத்தில் 2 மற்றும் 3 ஆவது வரிகளை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றைப் பதிலீடு செய்தல் வேண்டும்:—

"மீண்டுவரும் 3,170,000,000

மூலதனம் 3,600,000,000"

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டது.

"வாசகம் திருத்தப்பட்டவாறு அட்டவணையின் ஒரு பகுதியாக இருக்க வேண்டும்" எனும் பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

தலைப்பு 196

நிகழ்ச்சித்திட்டம் 01 (மீண்டுவரும் செலவினம்)

196 ஆம் தலைப்பின் 01 ஆம் நிகழ்ச்சித் திட்டம் — மீண்டுவருஞ் செலவுக்கென ரூபா 218,000,000 அட்டவணையில் சேர்க்கப்பட வேண்டுமென்ற பிரேரணை குழுவுக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

நிகழ்ச்சித்திட்டம் 01 (மூலதனச் செலவினம்)

196 ஆம் தலைப்பின் 01 ஆம் நிகழ்ச்சித் திட்டம் — மூலதனச் செலவுக்கென ரூபா 27,000,000 அட்டவணையில் சேர்க்கப்பட வேண்டுமென்ற பிரேரணை குழுவுக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் சார்பாக, விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அமைச்சர் பிரேரித்த திருத்தம்: 39 ஆம் பக்கத்தில் 7 ஆவது வரியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றைப் பதிலீடு செய்தல் வேண்டும்:—

"நிகழ்ச்சித்திட்டம் 02 அபிவிருத்திச் செயற்பாடுகள் 2,952,000,000 3,573,000,000"

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டது.

"வாசகம் திருத்தப்பட்டவாறு அட்டவணையின் ஒரு பகுதியாக இருக்க வேண்டும்" எனும் பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**டிஜிட்டல் பொருளாதார அமைச்சு**

நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் சார்பாக, விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அமைச்சர் பிரேரித்த திருத்தம்: 36 ஆம் பக்கத்தில் 12 ஆவது வரியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றைப் பதிலீடு செய்தல் வேண்டும்:—

"மீண்டுவரும் 6,400,000,000"

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டது.

"வாசகம் திருத்தப்பட்டவாறு அட்டவணையின் ஒரு பகுதியாக இருக்க வேண்டும்" எனும் பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

தலைப்பு 186

186 ஆம் தலைப்பின் 01 ஆம் நிகழ்ச்சித் திட்டம் — மீண்டுவருஞ் செலவுக்கென ரூபா 241,500,000 அட்டவணையில் சேர்க்கப்பட வேண்டுமென்ற பிரேரணை குழுவுக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

நிகழ்ச்சித்திட்டம் 01 (மூலதனச் செலவினம்)

186 ஆம் தலைப்பின் 01 ஆம் நிகழ்ச்சித் திட்டம் — மூலதனச் செலவுக்கென ரூபா 25,000,000 அட்டவணையில் சேர்க்கப்பட வேண்டுமென்ற பிரேரணை குழுவுக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் சார்பாக, விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அமைச்சர் பிரேரித்த திருத்தம்: 36 ஆம் பக்கத்தில் 17 ஆவது வரியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றைப் பதிலீடு செய்தல் வேண்டும்:—

"நிகழ்ச்சித்திட்டம் 02 அபிவிருத்திச் செயற்பாடுகள் 3,812,500,000 8,128,500,0000 "

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டது.

“வாசகம் திருத்தப்பட்டவாறு அட்டவணையின் ஒரு பகுதியாக இருக்க வேண்டும்” எனும் பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

தலைப்பு 227

நிகழ்ச்சித்திட்டம் 01 (மீண்டுவரும் செலவினம்)

227 ஆம் தலைப்பின் 01 ஆம் நிகழ்ச்சித் திட்டம் — மீண்டுவருஞ் செலவுக்கென ரூபா 2,346,000,000 அட்டவணையில் சேர்க்கப்பட வேண்டுமென்ற பிரேரணை குழுவுக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

நிகழ்ச்சித்திட்டம் 01 (மூலதனச் செலவினம்)

227 ஆம் தலைப்பின் 01 ஆம் நிகழ்ச்சித் திட்டம் — மூலதனச் செலவுக்கென ரூபா 1,946,500,000 அட்டவணையில் சேர்க்கப்பட வேண்டுமென்ற பிரேரணை குழுவுக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

“குழு செய்து முடித்த பரிசீலனை பற்றித் தவிசாளர் சபைக்கு அறிவிப்பதுடன் சபை மீண்டும் கூடுவதற்கு அனுமதி கோருவாராக” என விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை குழுவுக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

குழு செய்து முடித்த பரிசீலனை பற்றி அறிவிக்கப்பட்டது. 2025 நவம்பர் 27 ஆம் திகதி வியாழக்கிழமை குழு மீண்டும் கூடும்.

**6. ஒத்திவைப்பு (அரசாங்க காணிகளில் இருப்பாட்சி கொண்டுள்ள மக்களுக்கு அறுதியுறுதி வழங்கல்):** “இப் பாராளுமன்றம் இப்பொழுது ஒத்திவைக்கப்படுமாக” என விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை எடுத்தியம்பப்பெற்று விவாதிக்கப்பட்டது.

அவ்வேளை, நேரம் பி.ப. 6.30 மணிக்கு மேலாகிவிடவே, பி.ப. 6.52 மணிக்கு இன்றைய தின சபைத் தீர்மானத்திற்கிணங்க தலைமைத் தாங்கும் உறுப்பினர் பாராளுமன்றத்தை ஒத்திவைத்தார்.

அதன்படி பாராளுமன்றம், 2025 நவம்பர் 13 ஆம் திகதிய சபைத் தீர்மானத்திற்கிணங்க, 2025 நவம்பர் 27 ஆம் திகதி வியாழக்கிழமை மு.ப. 9.00 மணிவரை ஒத்திவைக்கப்பட்டது.